## தகவல் தொடர்பு தொழில் நுட்ப திட்டங்களுக்கான மக்கள் நிர்வாகம் ஓர் கருத்தரங்கு

# மதுரை கூடலரங்கம் 2013

### செப்டம்பர் 14, 2013
### தமுக்கம் மைதானம், மதுரை



ஒருங்கிணைப்பு

தகவல் தொடர்பு தொழில் நுட்ப திட்டம்,

தானம் அறக்கட்டளை, மதுரை.

## மதுரை கூடலரங்கம்

தானம் அறக்கட்டளை கடந்த 2003ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு இரண்டாண்டுக்கு ஒருமுறை கூடலரங்கம் நடத்தி வருகிறது. இதில் பலதரப்பட்ட அரசு நிர்வாகங்கள், அரசு சாரா நிறுவனங்கள், பல்கலைகழங்கள், விவசாயிகள், சமூதாய ஆர்வலர்கள், வங்கி அதிகாரிகள், கலந்து கொண்டு பல கருத்துக்களை ஆய்வு செய்வார்கள். இதில் பலதரப்பட்ட கருத்துக்களை ஒவ்வொரு முறையும் பல தலைப்புகளில் நடத்தி வருகிறது. இந்த ஆறாம் ஆண்டு "வளர்ச்சிக்கான ஆளுமை (ஆட்சி)" என்ற தலைப்பு கொண்டு கருத்துக்களை கொண்டுள்ளது.

## தகவலகம்~கிராமத் தகவல் தொடர்பு தொழில் நுட்ப திட்டம்










தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மட்டுமே மேற்கூறிய வளர்ச்சிக்கான சேவைகளை தரவல்ல உகந்த ஓர் உயரிய தொழில்நுட்பம். ஆனால் இத்தொழில்நட்பத்தின் பயனை கிராம அளவில் முழுமையாக எடுத்துச் செல்ல கிராம அளவில் ஓர் உள்கட்டமைப்பு தேவை, தானம் அறக்கட்டளை, தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பயனை கிராம அளவில் எடுத்து செல்ல கிராம அளவில் தகவலகங்களை நிறுவி செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு தகவலகங்களும் கம்ப்யூட்டர் மற்றும் இதர தொழில்நுட்ப வசதிகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் 20 தகவலகங்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், வளர் இளம் பெண்கள் மற்றும் குழந்தைகள் என அனைவருக்கும் உகந்த சேவைகளை அளித்து வருகின்றன. தானம் அறக்கட்டளையின் பிற மக்கள் நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு (களஞ்சியம், வயலகம்) அவர்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் இத்தகவலகங்களின் வழியே அளிக்கப்படுகின்றன.

# இணையம் குழுக்கள்




எந்த வளர்ச்சி திட்டங்களும், தொடர்ந்து பல வருடங்கள் தொடர்ந்து உறுதியாக செயல்பட, ஓர் மக்கள் அமைப்பு தேவை என்பது அடிப்படை உண்மை. அதன் அடிப்படையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் பயனை தொடர்ந்து கிராம அளவில் எடுத்து செல்ல தகவலக மக்கள் அமைப்பு உருவாக்கப்படுகிறது அவை இணையம் குழுக்கள் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு தகவலக கிராமத்திலும், தகவலகங்களை பயன்படுத்தியவர்களை, பயன்படுத்த விளைகின்றவர்களை அடிப்படை உறுப்பினர்களாக கொண்டு இணையம் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

## நோக்கம்

- தகவல் தொழில் நுட்ப அமைப்பை தொடர்ந்து எடுத்துச் செல்ல ஓர் மக்கள் அமைப்பு தேவை என்பதை இணையம் குழுக்கள் பிரகடனம் செய்தல்.
- இணையம் குழு மற்றும் கூட்டமைப்பு தங்களது சட்டதிட்டம் மற்றும் செயல்பாடுகளை வரையறை செய்தல்.
- கிராமத்தகவல் மையங்கள் மற்றும் சமூதாய வானொலி மற்றும் சமூதாய கல்லூரியின் மக்கள் அமைப்பு நிர்வாகங்களை பலப்படுத்துதல் பற்றிய அனுபவ பகிர்வு.

## கலந்து கொள்பவர்கள்

இணையம் குழு பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், தகவலகம் பணியாளர்கள், அரசு அதிகாரிகள், தானம் அறக்கட்டளை பணியாளர்கள்.

## நிகழ்ச்சி நடக்கும் நாள் மற்றும் நேரம்

செப்டம்பர் 14, 2013, நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை

## இடம்

தமுக்கம் மைதானம், மதுரை, தமிழ்நாடு.

தமுக்கம் மைதானம் மாட்டுதாவணி பேருந்து நிலையத்தில் இருந்து நான்கு கிலோமீட்டர்.
**பேருந்து:** மாட்டுதாவணியிலிருந்து பெரியார் பேருந்து நிலையம் செல்லும் வழி



# தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி



ஒருங்கிணைப்பாளர்
பா.முத்துகுமாரசாமி
இரா.ஆனந்தபூபதி
தகவல் தொடர்பு திட்டம்
தானம் அறக்கட்டளை,
1A, வைத்தியநாத புரம் கிழக்கு
சேவன்த்டே பள்ளி அருகில்,
எல்லீஸ்நகர்,
மதுரை~16
கைபேசி: 9944828346
கைபேசி: 9791277922
இமெயில்: mksamy@dhan.org
ananthaboopathy@gmail.com